**1. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் பொருட்டு கையிருப்புக் காசுக்கான காப்பீட்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல்.**

1.1 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் பொருட்டு செயற்படுத்தப்படும் கையிருப்புக் காசுக்கான காப்பீட்டு வேலைத் திட்டத்தின் கீழ் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் சமுதாய அடிப்படை வங்கிச் சங்களிடம் உள்ள பணம் கொள்ளையடிக்கப்படும் அல்லது திருடப்படும் சந்தர்ப்பத்தில் அதற்கான இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்ள முடியும். இழப்பீடு வழங்கப்படும் போது பொலீஸ் அறிக்கை, உள்ளக கணக்காய்வு விசாரணை அறிக்கை, பிரதேச செயலாளரின் பரிசீலனை அறிக்கை என்பன கவனத்தில் கொள்ளப்படும்.

1.2 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியில் நாளாந்தம் பணப்பெட்டகத்தில் வைப்புச் செய்யப்படும் பணம், வணிக வங்கிகட்கு கொண்டு செல்லும் மற்றும் கொண்டுவரும் பணம், காசாளரிடம் உள்ள பணத்தொகை ஆகிய அனைத்தும் சேர்த்தே கையிருப்புக் காசுக்கான காப்பீட்டு அளவு தீர்மானிக்கப்படல்வேண்டும். சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் நாளாந்தம் பணப் பெட்டகத்தில் வைப்புச் செய்யும் பணம் மற்றும் வணிக வங்கிகட்கு கொண்டு செல்லும், கொண்டுவரும் பணத் தொகையினை சேர்தே கையிருப்புக் காசுக்கான காப்பீட்டு அளவு தீர்மானிக்கப்படல் வேண்டும்.

1.3 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்கள் என்பன கட்டாயமாக கையிருப்புக் காசுக்கான காப்பீட்டு ஒப்பந்தத்தினை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

1.4 கையிருப்புக் காசுக்கான காப்பீட்டு ஒப்பந்தத்தினை ஒரு வருட காலத்துக்கு பெற்றுக் கொள்ளல் வேண்டும். ஒரு வருட காலம் என்பது சதாரணமாக கலண்டர் வருடத்தினை குறிக்கும்.
(ஜனவரி 01 தொடக்கம் டிசம்பர் 31 வரை)

**2. கையிருப்புக் காசுக்கான காப்பீட்டு எல்லை.**

2.1 இச் சுற்று நிருபம் வெளியிடப்படும் திகதியில் இருந்து நடை முறைக்கு வரும் வண்ணம் இதுவரை 10லட்சம் ரூபாவாக இருந்த அதி கூடிய கையிருப்புக்காசுக்கான காப்பீட்டுத் தொகை 20லட்சம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. காப்பீட்டுக்கான பணத்தொகையின் அளவு மற்றும் அதற்காக வருடத்துக்கு செலுத்த வேண்டிய காப்பீட்டுத் தவணைக் கட்டணம் தொடர்பான விபரங்கள் இணைப்பு 1ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2 கையிருப்புக் காசுக்கான காப்பீட்டின் அளவினை தீர்மானிக்கும் போது வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி /சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் என்பவற்றினுள் இடம் பெறும் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும். இங்கு முகாமையாளா் கொடுக்கல் வாங்கல்களின் அளவினில் கவனம் செலுத்தி கட்டுப்பாட்டுச் சபை / நிறைவேற்றுச் சபை உடன் கலந்துரையாடி காப்பீடு செய்ய வேண்டிய தொகையினை தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

2.3 தேவையற்ற விதத்தில் கூடிய காப்பீட்டு தொகையினை தீர்மானித்து அதிகளவான பணத்தினை தேக்கி வைத்துக் கொள்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். கூடுதலான கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெறுகின்ற, அதிக கடன்கள் வழங்கப்படுகின்ற வங்கிகள், வங்கிச்சங்கங்கள் மாத்திரம் தமது தேவைக்கற்ற விதத்தில் கூடிய பணத்தொகையினை வைத்துக்கொள்ள வேண்டும்.

2.4 கூடிய பணத்தொகைக்கான அங்கிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்பதற்காக தேவையற்ற விதத்தில் அதிகளவான பணத்தொகையினை பணப்பெட்டகத்தில் வைத்திருத்தல் மற்றும் புழக்க சுற்றோட்டத்தில் பயன்படுத்துதல் போன்ற சந்தர்ப்பங்களில் ஏதும் சம்பங்கள் ஏற்படுமாக இருந்தால் அதற்கான நஷ்ட்டயீடுகள் வழங்கப்படும் போது அது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும். அச்சந்தர்ப்பத்தில் தேவையற்ற விதத்தில் பணத்தொகை தேக்கி வைக்கப்பட்டிருந்தமை புலப்படுமாக இருந்தால் உரிய உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குரிய வழிவகைகள் செய்யப்படும். இன் நிலையினை தவிர்த்துக் கொள்வதற்கு அதிகளவான கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெறுகின்ற அவசியமான நாட்களில் மாத்திரம் அனுமதிக்கப்பட்ட பணத்தொகையினை தேக்கி வைத்துக் கொள்வது பொருத்தமானதாகும்.

2.5 வாழ்வின் எழுச்சிசமுதாய அடிப்படை வங்கி, சமுதாய அடிப்படை வங்கிச்சங்கம் என்பவற்றின் கையிருப்புக் காசுக்கான காப்பீட்டுத் தொகையினை தீர்மானித்தல், பணப்பெட்டகத்தில் பணத்தை வைப்புச் செய்தல், வணிக வங்கிட்கு பணத்தை கொண்டு செல்லல், கொண்டுவருதல் ஆகிய சந்தர்ப்பங்களில் அவை தொடர்பாக வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் மாததிரம் செயற்படுவதற்கு வங்கி முகாமையாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஆலோசனைகளை பொருட்படுத்தாது செயற்பட்டதன் விளைவாக வங்கியில் உள்ள பணத்திற்கு ஏதும் ஆபத்துக்கள் ஏற்படுமாயின் அந்த இழப்புகட்கு கையிருப்புக் காசுக்கான காப்பீட்டு திட்டத்தின் கீழ் எந்த விதமான நஷ்ட்டயீடுகளும் வழங்கப்படமாட்டாது.

2.6 ஆலோசனைகளை பின்பற்றாமல் செயற்பட்டதன் விளைவாக சமுதாய அடிப்படை வங்கி, வங்கிச் சங்கத்துக்குரிய பணத்திற்கு ஏதும் பாதிப்புக்கள் எற்படுமாயின் அதற்கு வங்கி முகாமையாளர் உட்பட பணிக்குழுவினர் தமது சொந்த பணத்தில் இருந்து அதற்கான இழப்பீட்டினை செலுத்துவதற்கு பொறுப்புடையவர்கள் என்பதனையும் தங்களது கவனத்திற்கு கொண்டுவருகிறேம்.

**3. காப்பீட்டுத் தவணைக்கட்டணம் கணிப்பிடும் முறை :-**

3.1 ரூபா 15,000/= இருந்து 1,000,000/= வரையான பணக் காப்பீட்டுத் தொகைக்கு காப்பீட்டுத் தவணைக் கட்டணத்தில் 5%சலுகையாக வழுங்கப்படும். ரூபா 11 இலட்சத்தில் இருந்து (ரூ 11 இலட்சம் அடங்கலாக ) ரூபா 20 இலட்சம் வரையான தொகைக்கு இன் சலுகையாக வழங்கப்படமாட்டாது.

3.2 ஏதேனும் ஒரு வங்கி அல்லது வங்கிச் சங்கங்கம் முதல் தடவையாக ரூபா15,000/= - ரூபா1,000,000/= வரையான பணத் தொகைக்கான (ரூபா 1,000,000/=க்குள்) காப்பீட்டினை பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் வருடத்துக்கான தவணைக்குரிய முழுத் தொகையினையும் செலுத்துதல் வேண்டும். அடுத்த ஆண்டு அதே தொகைக்கு காப்பீட்டினை பெற்றுக் கொள்வதாயின் பணக்கொள்ளைச் சம்பவங்களின் பொருட்டு காப்புறுதி இழப்பீட்டுத் தொகைகள் ஏதும் பெற்றுக்கொள்ளவில்லை எனின் முழுத் தவணைக் கட்டணத்தில் 5% தினை குறைத்துக் கொண்டு மீதித் தொகையினை காப்பீட்டுத் தவணைக்கட்ணமாக செலுத்த வேண்டும். அதே பேன்று காப்புறுதி நஷ்டயீட்டினைப் பெற்று இருப்பின் அதற்கு அடுத்த ஆண்டு தவணைக் கட்டணம் முழுத்தொகையினையும் செலுத்தல் வேண்டும்.

5% சலுகை கணிப்படுவதற்கான உதாரணம்.

2016 ஆண்டு முதல் தடவையாக காப்பீட்டு ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்கின்ற ஒரு நிறுவனம் 2016ல் முதல் தடவையாக 3இலட்சம் ரூபாவிற்கான காப்புறுதி ஒப்பந்தத்தினை பெற்றுக் கொள்வதாயின் அதற்காக செலுத்தவேண்டிய கட்டணத்தொகை 9000/=ரூபாவாகும்.

2016ல் இழப்பீடுகள் ஏதுவும் பெறாதுவிடின் 2017ம் ஆண்டு ரூபா 03 இலட்சத்துக்கு காப்பீட்டு ஒப்பந்தத்தினை பெற்றுக் கொள்வதாயின் தவணைக் கட்டணமாக செலுத்த வேண்டிய தொகை 8550/=வாகும். இது கீழ்வருமாறு கணிப்பிடப்படும்.

**9,000 x 5/100 = 450.00**

**9,000 – 450 = 8,550.00**

எதிர்காலத்தில் காப்பீட்டு தொகை மாறாது இருப்பின் இத் தொகையினயே செலுத்தல் வேண்டும். எதும் இழப்பீடுகள் பெற்றிருப்பின் அடுத்த வருடம் ரூபா 9,000/= செலுத்த வேண்டும்.

அதே நிறுவனம் 2018ம் ஆண்டில் ரூபா 4 இலட்சமாக காப்பீட்டினை அதிகரித்துக் கொள்ள வேண்டுமாயின் அதற்காக செலுத்த வேண்டிய முழுத் தவணைக் கட்டணம் ரூபா 10,000/= வாகும்.

2017ம் ஆண்டில் ரூபா 3 இலட்சத்துக்கான காப்பீடு பெற்றுள்ளதால் அந்த தொகைக்குரிய 5% சலுகையான ரூபா 450/= தொகை 10,000/=ரூபாவில் இருந்து கழிக்கப்படல் வேண்டும்.

**10,000 – 450 = 9,550.00**

ரூபா 3 இலட்சத்தில் இருந்து ரூபா 4 இலட்சமாக அதிகரித்தாலும் தவணக் கட்டணம் 9550 ரூபா வாகவே அமையும். அடுத்த வருடத்தில் இருந்து ரூபா 4 இலட்சம் ரூபாவுக்கான 5% ம் குறைத்து தவணைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

**10,000 X 5/100 = 500/=**

**10,000 – 500 = 9,500/=**

முன்னைய ஆண்டின் காப்பீட்டு தொகையை விட அதிகரிக்கும் போது இந்த முறையில் கணிப்பீடு மேற் கொள்ளப்படும்.

காப்பீட்டுத் தொகை அதிகரிக்காதுவிடின் எல்லா சந்தர்ப்பங்களிலும் சமமான தவணைக்கட்டணமே செலுத்த வேண்டும். நட்டயீடுகள் கோரப்படவில்லை என்பதற்காக வருடாவருடம் தவணைக் கட்டணக் கட்டணத்தில் 5% குறைவு ஏற்படாது.

3.3 ஏதாவது காரணத்துக்காக வருட நடுப்பகுதியில் காப்பீட்டுத் தொகையின் அளவினை அதிகரிப்பதற்கான தேவை ஏற்படுமாயின் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கும் தொகைக்கான தவணைக் கட்டணத்தில் இருந்து ஏற்கனவே குறித்த ஆண்டுக்காக பெற்றிருந்த காப்பீட்டுத் தொகைக்கான தவணைக் கட்டணத்தை கழித்துக் கொள்ள வேண்டும். பின்னர் மீதித் தொகையினை 12 ஆல் பிரித்து அதனை காப்பீட்டுத் தொகையினை அதிகரித்துக் கொள்ள இருக்கும் மீதியான மாதங்களின் எண்ணிக்கையால் பெருக்கி வரும் பெறுமதியினை மேலதிக தவணைக் கட்டணமாக செலுத்த வேண்டும்.

உ+ம் :- ஒரு வருடத்தில் ரூபா 2 இலட்சம் பெறுமதியான காப்பீட்டுக்கு ரூபா 7,125/= செலுத்தப்பட்டுள்ளது.

அதே ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் இருந்து காப்பீட்டுத் தொகையினை ரூபா 4 இலட்சமாக அதிகரிப்பதற்கான தேவைப்பாடு இருக்குமாயின் அதற்கான மீதித் தொகை கீழ் வருமாறு கணிக்கப்படல் வேண்டும்.

ரூபா 4 இலட்சத்திற்கான தவணைப்பணம் ரூபா 10,000/= ஆகும்.
செலுத்தப்பட்ட பணத்தொகை ரூபா 7,125/= ஆகும்.

செலுத்த வேண்டிய மீதித்தொகையானது 10,000 – 7,125 = 2,875/=

ஒருமாதத்துக்கான கட்டணம் 2,875 / 12 = 239.58

ஏப்ரல் மாதத்தில் இருந்து காப்பீட்டு தொகையினை அதிகரித்துக் கொள்வதாயின் ஏப்ரல் இருந்து டிசம்பர் வரையான காலம் 9 மாதங்களாகும். (ஏப்ரல் மாதம் உள்ளடக்கலாக)

செலுத்த வேண்டிய பணம் **239.58 x 9 = 2,156.24**

இதன் பிரகாரம் ஆண்டின் நடுப்பகுதி தொடக்கம்ரூபா 2 இலட்சத்தில் இருந்து 4 இலட்சம் வரை காப்பீட்டு தொகையினை அதிகரிக்க வேண்டுமாயின் அதற்காக செலுத்த வேண்டிய மீதித் தொகை ரூபா 2,156.24 ஆகும். வருடத்தின் நடுப்பகுதியில் இருந்து காப்பீட்டு தொகையினை அதிகரித்துக் கொள்ள வேண்டுமாயின் இவ்விதம் கணிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும் . மீண்டும் அடுத்த ஆண்டில் இருந்து (ஜனவரி 01ல் இருந்து ) காப்பீட்டுத் தொகைக்கான உரிய முழு தவணைக் கட்டணத்தையும் செலுத்த வேண்டும்.

**4. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியின் பணிக்குழுவினருக்கான உடல் உபாதைக் காப்புறுதி திட்டம் செயற்படுத்தல்.**

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியில் உள்ள பணம் கொள்ளையிடப்படும், திருடப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது சமுதாய அடிப்படை வங்கியில் உள்ள பணம் வர்த்தக வங்கிகட்கு கொண்டு செல்லப்படும்,கொண்டுவரப்படும் போது அப் பணத்தினை கொள்ளையிட முயற்சிகள் எடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் உத்தியோகத்தர்கட்கு ஏற்படும் உடல் உபாதைகட்கு இழப்பீட்டினை வழங்கும் பொருட்டு உடல் உபாதைக் காப்பீட்டுத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்கட்கு தற்போதைக்கு இத்திட்டம் செயற்படுத்தப்படமாட்டாது.

**5. உடல் உபாதைக் காப்புறுதிக்கான தவணைக் கட்டணம்.**

5.1 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் உடல் உபாதைக் காப்பீட்டுக்காக வருடாந்தம் ரூபா 1,000/= பணத்தினை ஒரே தடவையில் செலுத்த வேண்டும்.

5.2 கையிருப்புக் காசுக்கான காப்பீட்டுக்குரிய தவணைக் கட்டணத்துடன் இதற்கான தொகையையும் சேர்த்து ஒரே காசோலை எழுதப்படல் வேண்டும்.

**6. காசோலை அனுப்பிவைத்தல்.**

6.1 கையிருப்புக் காசுக்கான காப்பீடு மற்றும் உடல் உபாதைக் காப்பீடு இரண்டையும் சேர்த்துஒரே காசோலையினை,**முகாமையாளர்,இலங்கை வங்கி பத்தரமுல்லை, திவிநெகும சமுதாய அடிப்படை வங்கி கையிருப்புக் காசுக்கான காப்பீட்டு நிதியம், கணக்கு இலக்கம் 2937825** என எழுதி இணைப்பு இலக்கம் 2 படிவத்தையும் பூரணப்படுத்தி பதிவுத் தபால் மூலம் **பணிப்பாளர் குறுநிதி, குறுநிதி வங்கிப்பிரிவு, வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம், 4 வது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை** என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

6.2 எதிரே வருகின்ற ஆண்டுக்கான காப்புறுதி ஒப்பந்தத்தை பெற்றுக் கொள்வதற்கு நடைமுறை ஆண்டின் டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் குறுநிதிப் பிரிவுக்கு காசோலை கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

6.3 டிசம்பர் 31ம் திகதியில் காசோலையினை எழுதி அனுப்பி வைக்கும் போது காசோலை கிடைக்கப் பெற்று வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் வரை அல்லது காசோலை காலதாமதமாகின்ற சந்தர்பங்களில் எதிரே வரும் ஆண்டின் இல தினங்களுக்கு காப்பீட்டு பாதுகாப்பு இல்லாமல் போய்விடும். அதேபோல் இக்காலப்பகுதிக்குள் எதும் சம்பங்கள் இடம் பெறின் அதற்கான இழப்பீடு வழங்கப்படமாட்டாது. எனவே இன் நிலமையினைக் கருத்தில் கொண்டு டிசம்பர் மாதத்தின் முதல் இரண்டு வாரங்களுக்குள் காசோலையினை அனுப்பி வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

**7. தண்டப் பணம் அறவிடல்.**

7.1 டிசம்பர் 31ம் திகதிக்கு பின்னர் குறுநிதிப் பிரிவுக்கு கிடைக்கப்பெறும் காசோலைகட்கு அதன் பெறுமதியில் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.

7.2 சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச்சங்கம் டிசம்பர் 31ம் திகதிக்கு பின்னர் எழுதி அனுப்பும் காசோலையின் பொருட்டு அதன் பெறுமதியில் 10%த் தொகையினை கணக்கிட்டு அந்தத் தொகையினையும் சேர்த்து காசோலை எழுதப்படல் வேண்டும். இத் தண்டப்பணத்தொகை வங்கிப் பணிக் குழுவினரின் சொந்த நிதியில் இருந்து அறவிடப்படல் வேண்டும். இது தொடர்பான கணக்கு பதிவு முறைகள் அனைத்தும் பின்வருமாறு அமையும்.

**8. கணக்கு பதிவு முறைகள்.**

8.1 <u>கையிருப்புக் காசு மற்றும் உடல் உபாதைக் காபீடு தொடர்பான காசோலைகள் அனுப்பப்படும் போது மேற் கொள்ளவேண்டிய கணக்கு பதிவுகள்.</u>

**2107** - செலவுக் கணக்கு கொள்ளை, திருட்டுகான காப்பீட்டுக் கட்டணம் **- பற்று**

**2108** - செலவுக் கணக்கு புழக்க சுற்றோட்டத்தில் உள்ள பணத்துக்கான காப்பீட்டு கட்டணம் **- பற்று**

**3001** - நடைமுறைக் கணக்கு **- வரவு**

8.2 <u>10% தாமதக் கட்டணம் பணிக்குழுவினரிடம் இருந்து அறவிடப்படும் போது கணக்குப்பதிவு</u>

8.2.1 <u>தாமதக் கட்டணம் பணிக்குழுவினரிடம் இருந்து அறவிடல்</u>.

**3401** - கையிருப்பு காசுக் கணக்கு **- பற்று**

**4048** - திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் குறுநிதிப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிடம் இருந்துஅறவிடப்பட்ட தாமதக் கட்டணக் கணக்கு **- வரவு**

8.2.2 <u>தாமதக் கட்டணம் பணிக்குழுவின் வைப்புக் கணக்கில் இருந்து அறவிடப்படுவதாயின்.</u>

**4407/4403-**உரிய வைப்புக் கணக்கு(அங்கத்தர் அல்லாதோர்/திரியமாதா) **- பற்று**

**4048** - திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் குறுநிதிப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட்ட தாமதக் கட்டணக் கணக்கு **- வரவு**

8.3 <u>தாமதக் கட்டணத்துடன் காப்புறுதித் தவணைப்பணம் குறுநிதிப் பிரிவுக்கு அனுப்பி வைத்தல்.</u>

**4048** - திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் குறுநிதிப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட்ட தாமதக் கட்டணக் கணக்கு **- பற்று**

**2107** - செலவுக்கணக்கு - கொள்ளை, திருட்டுகான காப்பீட்டுக் கட்டணம் **- பற்று**

**2108** - செலவுக் கணக்கு - புழக்க சுற்றோட்டத்தில் உள்ள பணத்துக்கான காப்பீட்டு கட்டணம் **- பற்று**

**3001** - நடைமுறைக் கணக்கு **- வரவு**

8.4 பணக் கொள்ளை, களவு இடம் பெற்ற சந்தர்ப்பத்தில் கணக்கு பதிவு

**3310** - தொங்கல் கணக்கு (கடன்பட்டோர்) **- பற்று**

**3401** - கையிருப்புக் காசுக் கணக்கு **- வரவு**

8.5 <u>பணக் கொள்ளையின் பொருட்டு நஸ்ட்டயீட்டுத் தொகைபெறப்பட்ட பின்னர் கணக்குப் பதிவு.</u>

**3001** - நடைமுறைக் கணக்கு **- பற்று**

**4003** - வாடிக்கையாளர் வைப்புச் செய்த காசோலைக் கணக்கு **- வரவு**

காசோலை கணக்கில் வைப்புச் செய்தபின்னர்(தேறிய பின்னர்)

**4003** - வாடிக்கையாளர் வைப்புச் செய்த காசோலை கணக்கு **- பற்று**

**3310** - தொங்கல் கணக்கு (கடன்பட்டோர்) **- வரவு**

(10% தாமதக் கட்டணம் உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்படுவதற்கு பொறுப்புக் கணக்கின் கீழ் 4048 எனும் கணக்கு புதிதாக அறிமுகப்படுத்தப்படுகின்றது)

9. கையிருப்புக் காசுக்கான காப்பீடு மற்றும் உடல் உபாதை காப்பீடுகட்கு இழப்பீடு கோரல்.

9.1 கையிருப்புக் காப்பீட்டுக்கான இழுப்பீடு கோரல்.

9.1.1 சமுதாய அடிப்படை வங்கி / வங்கிச் சங்கத்தில் உள்ள பணம் கொள்ளையடிக்கப்படும் அல்லது திருடப்படும் சந்தர்ப்பத்தில் உடன்படிகையாக இது சம்மந்தமாகபிரதேச செயலாளருக்கும்,பொலிசுக்கும் தெரியப்படுத்தல் வேண்டும். பிரதேச செயலாளரினால் இது சம்மந்தமாக உடனடியாக ஆரம்பவிசாரணை ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

9.1.2 சம்பவம் நடவந்தவுடன் உடனடியாக வாழ்வின் எழுச்சி பிரதான காரியாலத்தின் குறுநிதிப் பணிப்பாளருக்கு தொலைபேசி மூலம் அறிவிப்பது அத்தியவசியமானதாகும்.

9.1.3 இழப்பீடு கோரும் போது இணைப்பு 3ல் உள்ள விண்ணப்பப்படிவத்தினை சரியான முறையில் பூரணப்படுத்தி பொலீஸ் அறிக்கை, பிரதேச செயலாளரின் ஆரம்ப விசாரண அறிக்கையுடன் மிக விரைவாக குறுநிதிப் பிரிவுக்கு அனுப்பிவைக்க வேண்டும். உரிய ஆவணங்களுடன் நஸ்ட்டயீட்டுக் கோரிக்கை அனுப்பி வைப்பதற்கு 30 நாட்களைவிட தாமதமாகுமாயின் ஏற்பட்டுள்ள நஸ்ட்டத்தினை உரிய உத்தியோகத்தர்களே செலுத்த வேண்டும்.

9.2 **உடல் உபாதை காப்பீட்டின் பொருட்டு இழப்பீடு கோரல்.**

9.2.1 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிக்கு சொந்தமான பணம் கொள்ளையிடப்படும், திருடப்படும் சந்தர்ப்பத்தில் ஏற்படும் உடல் உபாதைகட்கான காப்பீட்டிற்கு மேற்படி 9.1.1 / 9.1.2 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

9.2.2 அதேபோல் ஏற்பட்டுள்ள உடல் உபாதைகள் / பாதிப்புக்கள் சம்மந்தமாக அரச வைத்தியர் ஊடாக பெறப்படும் சிபாரிசு மற்றும் பொலிஸில் செய்துள்ள முறைப்பாட்டின் பிரதி என்பவற்றை விண்ணப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்க வேண்டும்.

**10. உடல் உபாதை காப்பீட்டுக்கான இழப்பீட்டினை பெற்றுக் கொள்வதற்கு இருக்க வேண்டிய தகமைகள்.**

10.1 உரிய முறைப்படி காப்பீட்டுத் தவணைகள் செலுத்தப்பட்டிருத்தல். (உபாதைகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் காப்பீட்டு தவணைகள் செலுத்தப்பட்டிருத்தல்)

10.2 வாழ்வின் எழுச்சி வங்கியில் கையிருப்பு பணத்தினை பாதுகாப்பதற்கு உரிய முறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

10.3 வாழ்வின் எழுச்சி வங்கியில் நிதி களவாடப்படல் அல்லது கொள்ளையிடப்படல் அல்லது அவ்வாறான நடவடிக்கைக்கு முயற்சித்தல் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்வதுடன் வாழ்வின் எழுச்சி தலைமைக் காரியாலயத்தின் குறுநிதிப் பிரிவுக்கும் தெரியப்படுத்தல் வேண்டும்.

10.4 இவ்வாறான சம்பவத்தால் பணத்திற்கு ஏதும் பாதிப்புகள் ஏற்பட்டிருக்குமாயின் இழப்பீட்டினை பெற்றுக்கொள்வதற்கு கையிருப்புக் காசுக்கான காப்பீட்டின் மூலம் இழப்பீடு கோரல்.

**11. கையிருப்புக் காசு மற்றும் உடல் உபாதை காப்பீட்டிற்கு இழப்பீடு வழங்கல்.**

11.1 கையிருப்புக் காசுக்கான காப்பீட்டின் பொருட்டு இழப்பீடு வழங்கல்.

11.1.1 உரிய பரிசீலனை அறிக்கையினை கருத்தில் கொண்டு பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின் பிரகாரம் இழப்பீடு வழங்கப்படுவதுடன் இழந்த பணத்தொகை அல்லது அதில் ஒருபகுதி அல்லது தேடுதல் நடவடிக்கையின் போது கண்டெடுக்கப்படும் தொகைக்கு சமமான தொகையினை குறுநிதிப்பிரிவுக்கு மீளச் செலுத்தல் வேண்டும்.

11.2 உடல் உபாதைக் காப்பீட்டிற்கு இழப்பீடு வழங்கல்

11.2.1 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிப் பிரதேசத்தினுள் அல்லது வாழ்வின் எழுச்சி வங்கியிலிருந்து வணிக வங்கிக்கு பணம் எடுத்துச் செல்லும் போது அல்லது வணிக வங்கியில் இருந்து வாழ்வின் எழுச்சி வங்கிக்கு பணம் எடுத்து வரும் போதும், பணம் கொள்ளையடிக்கப்பட அல்லது திருடிச் செல்ல நடவடிக்கை எடுக்கும் சந்தர்ப்பங்களில் அதனை தடுப்பதற்கு முற்படும் போது ஏற்படுகின்ற உயிர் ஆபத்து அல்லது உடல் உபாதைகள், இடர்பாடுகளின் பொருட்டு இன் நிதியத்தில் இருந்து வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியின் பணிக் குழுவினர் பலாபலனை பெற்றுக் கொள்ளமுடியும்.

11.2.2 களத்தில் பணம் அறவிடும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கட்கு இக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்கப்படமாட்டாது. ஆனால் யாராவது களத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் எந்தவொரு நிரந்தர சேவையாளரோ அவரது கடமையின் நிமிர்த்தம் வங்கிப் பிரதேசத்தில் தங்கியிருக்கும் சந்தர்ப்பத்தில் ஏற்படுகின்ற கொள்ளை, திருட்டு சம்பவங்களின் போது அதனை தடுப்பதற்கு முற்படும் சந்தர்ப்பத்தில், அவருக்கு உடல் ரீதியாக ஏற்படும் இடர்பாடுகளை கருத்தில் கொண்டு அந்த உத்தியோத்தர்களும் இந்த காப்பீட்டின் மூலம் பலாபலனை பெற்றுக் கொள்ள முடியும்.

11.3. இக்காப்பீட்டில் இருந்து பலாபலனைப் பெற்றுக் கொள்வதற்கு கையிருப்புக் காசுக்கான காப்பீட்டின் கீழ் வங்கியின் பணத்துக்கான பாதுகாப்பு தொடர்பாக பின்பற்ற வேண்டிய சகல நடைமுறைகளும் பின்பற்ற வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

11.4. பெற்றுக் கொள்ளக் கூடிய உயர்ந்தபட்ச பலாபலன்கள் :- முகாமையாளர்கள் அதற்கு மேலான நிலையில் உள்ள அதிகாரிகள் வாழ்வின் எமுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் எழுதுவினைஞர்கள் தரத்தில் உள்ளவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய உயர்ந்த பட்ச இழப்பீட்டுத் தொகை ரூபா 3 இலட்சம் ஆகும்.

11.5. சம்பவம் இடம் பெற்று ஒரு மாத காலத்தினுள் கீழ்வரும் இடர்களுக்கு முகம் கொடுக்கும் ஊழியர்கட்கு /மரணமடைந்தால் அவரது சட்டரீதியான உரிமையாளருக்கு உயர்ந்த பட்ச காப்பீட்டுத் தொகையில் இருந்து இழப்பின் விகிதாசார தன்மைக்கு ஏற்ப வழங்கப்படும் இழப்பீட்டு விகிதாசாரம் கீழ்வருமாறு அமையும்.

11.6. மரணம் - **காப்புறுதி தொகையில் 100%**

11.7. இரு கண்களினதும் பார்வை முழுமையாகவும்நிரந்தரமாகவும் பார்வை இழத்தல். - **காப்புறுதி தொகையில் 100%**

11.8. உடலில் இருந்து வேறாக இரு கைகள் அல்லது இரு கால்கள் அல்லது ஒரு கையுடன் ஒரு கால் அல்லது மொத்தமாக இழந்திருத்தல். - **காப்புறுதி தொகையில் 100%**

11.9. ஒரு கண்ணின் பார்வை முழுமையாக இழந்து இருப்பதுடன் உடலின் ஒரு கை அல்லது ஒரு காலை பூரணமாக இழந்திருத்தல். - **காப்புறுதி தொகையில் 100%**

11.10. ஒரு கண்ணின் பார்வை முழுமையாக இழத்தல் - **காப்புறுதி தொகையில் 50%**

11.11. உடலில் இருந்து ஒரு கை அல்லது ஒரு கால் முழுமையாக இழந்திருத்தல் - **காப்புறுதி தொகையில் 50%**

11.12. பொதுவான கடமை நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத தற்காலிகமான (முழு அழவிலான) பாதிப்புஅரச வைத்தியர் ஒருவரின் சிபாரிசின் படி ஊழியர் ஒருவர் விடுமுறையில் நின்ற தினங்களை கவனத்தில் கொண்டு ஆகக் கூடியது 6 மாதங்களுக்குட்பட்டவாறு கீழ்வரும் இழப்பீடு வழங்கப்படும்.

11.12.1. 07தினங்களுக்கான வைத்திய விடுமுறையின் பொருட்டு காப்பீட்டுத் தொகையில் 0.5%த்தின் அடிப்படையில் விடுமுறை பெற்ற தினங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இழப்பீடு வழங்கப்படும் (அதாவது ஒரு நாளைக்கு காப்பறுதித் தொகையில் 0.071% ஆகும் )

11.13. பொதுவான கடமை நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத அளவுக்கு ஓரளவான இழப்பு அல்லது தற்காலிகமாக இழப்புகள் எனின் கடமைக்கு அறிக்கையிடப்பட்டதன் பின்னர் பொதுவான கடமை நடவடிக்கைகளில் தற்காலிகமாக ஈடுபட முடியாதிருந்த நிலமைக்கு அரச வைத்தியர் ஒருவரால் இலகு கடமை நடவடிக்கைக்காக சிபாரிசு செய்யும் காலத்துக்கு சம்பவம் நடைபெற்று ஆகக்கூடியது 6 மாத காலத்துக்கு கீழ் குறிப்பிடப்படும் வகையில் இழப்பீடு வழங்கப்படும்.

11.13.1. 07 தினங்களுக்கு காப்புறுதித் தொகையில் 0.2%தின் அடிப்படையில் இலகு கடமைகளில் ஈடுபடும் காலத்துக்கு (அதாவது ஒரு நாளைக்கு காப்புறுதித் தொகையில் 0.029%) இழப்பீடு வழங்கப்படும்.

11.14. பொதுவான கடமை நடவடிக்கைகளில் அல்லது ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதளவிற்கு முழுமையான மற்றும் நிரந்தரமான இழப்பீட்டுக்கு காப்பீட்டுத் தொகையில் 100% இழப்பீடு வழங்கப்படும்.

**12 பொதுவான விடயங்கள்**

12.1. வணிக வங்கிகட்கு பணத்தை கொண்டு செல்லும் அல்லது கொண்டுவரும் சந்தர்பங்களில் அதற்காக அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியொகத்தர்களை மாத்திரம் ஈடுபடுத்துவதற்கு முகாமையாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் . போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பாக வழங்கப்பட்டள்ள ஆலோசனைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

12.2. இக்கையிருப்பக் காசுக்கான காப்பீடு மற்றும் உடல் உபாதைக் காப்பீட்டு நிதியம் என்பன பணக் கொள்ளை மற்றம் திருட்டுச் சம்பவங்களின் போது வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படைவ ங்கிகளுக்கு அல்லது வங்கிச் சங்கங்களுக்கு ஏற்படும் நஸ்டத்தினை ஈடு செய்வதற்கே கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

12.3. தற்போது இன் நிதியம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி தினணக்களத்தின் குறுநிதிப் பிரிவின் ஊடாக செயற்படத்தப்படுகின்றது.

12.4. கையிருப்புக் காசு மற்றும் உடல் உபாதைக் காப்பீடு தொடர்பாக ஏதும் பிரட்சினைகள் ஏற்படின் 0112889003 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக குறுநிதிப் பிரிவின் பணிப்பாளருடன் தொடர்ப கொண்டு தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

| | |
|---|---|
| சுனந்த பியசீலி<br>பணிப்பாளர்(குறுநிதி) | தம்மிக்க குணவர்தன<br>பணிப்பாளர் நாயகம் (ப.க) |

**பிரதிகள்**

| | |
|---|---|
| 1.செயலாளர் வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சு | - தகவலுக்காக |
| 2.சகல மாவட்ட செயலாளர்கட்கும்(வாழ்வின் எழுச்சி மேலதிக பணிப்பாளர் நாயகம்) | - தகவலுக்காக |
| 3.மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் | - தகவலுக்காக |
| 4.சகல பிரதேச செயலாளர்ட்கும் | - தகவலுக்காக |
| 5.சகல தலைமையக முகாமையாளர்ட்கும் | - தகவலுக்காக |
| 6.பிரதான உள்ளக கணக்காய்வாளர் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் | - தகவலுக்காக |
| 7.அரச கணக்காய்வதிபதி | - தகவலுக்காக |

Translated by: I. Aliyar

<u>கையிருப்புக் காசின் அளவுக்குரிய காப்பீட்டுத் தவணை கட்டணம் தொடர்பான விபரம்</u>

| காப்பீட்டு தொகை | தொகைக்குரிய தவணைக் கட்டணம் | 5% சலுகை | சலுகை கழிக்கப்பட்ட பின்னர் தொகை |
|---|---|---|---|
| 15,000.00 | 1,500.00 | 75.00 | 1,425.00 |
| 20,000.00 | 1,800.00 | 90.00 | 1,710.00 |
| 25,000.00 | 2,100.00 | 105.00 | 1,995.00 |
| 30,000.00 | 2,400.00 | 120.00 | 2,280.00 |
| 35,000.00 | 2,700.00 | 135.00 | 2,565.00 |
| 40,000.00 | 3,000.00 | 150.00 | 2,850.00 |
| 45,000.00 | 3,300.00 | 165.00 | 3,135.00 |
| 50,000.00 | 3,600.00 | 180.00 | 3,420.00 |
| 55,000.00 | 3,900.00 | 195.00 | 3,705.00 |
| 60,000.00 | 4,200.00 | 210.00 | 3,990.00 |
| 65,000.00 | 4,500.00 | 225.00 | 4,275.00 |
| 70,000.00 | 4,650.00 | 232.50 | 4,417.50 |
| 75,000.00 | 4,800.00 | 240.00 | 4,560.00 |
| 80,000.00 | 5,100.00 | 255.00 | 4,845.00 |
| 85,000.00 | 5,400.00 | 270.00 | 5,130.00 |
| 90,000.00 | 5,700.00 | 285.00 | 5,415.00 |
| 95,000.00 | 5,850.00 | 292.50 | 5,557.50 |
| 100,000.00 | 6,000.00 | 300.00 | 5,700.00 |
| 125,000.00 | 6,600.00 | 330.00 | 6,270.00 |
| 150,000.00 | 6,900.00 | 345.00 | 6,555.00 |
| 175,000.00 | 7,200.00 | 360.00 | 6,840.00 |
| 200,000.00 | 7,500.00 | 375.00 | 7,125.00 |
| 225,000.00 | 7,800.00 | 390.00 | 7,410.00 |
| 250,000.00 | 8,100.00 | 405.00 | 7,695.00 |
| 275,000.00 | 8,400.00 | 420.00 | 7,980.00 |
| 300,000.00 | 9,000.00 | 450.00 | 8,550.00 |
| 350,000.00 | 9,500.00 | 475.00 | 9,025.00 |
| 400,000.00 | 10,000.00 | 500.00 | 9,500.00 |
| 450,000.00 | 11,000.00 | 550.00 | 10,450.00 |
| 500,000.00 | 12,000.00 | 600.00 | 11,400.00 |
| 550,000.00 | 13,000.00 | 650.00 | 12,350.00 |
| 600,000.00 | 14,000.00 | 700.00 | 13,300.00 |
| 650,000.00 | 15,000.00 | 750.00 | 14,250.00 |
| 700,000.00 | 16,000.00 | 800.00 | 15,200.00 |
| 750,000.00 | 17,000.00 | 850.00 | 16,150.00 |
| 800,000.00 | 18,000.00 | 900.00 | 17,100.00 |
| 900,000.00 | 20,000.00 | 1,000.00 | 19,000.00 |
| 1,000,000.00 | 22,000.00 | 1,100.00 | 20,900.00 |
| 1,100,000.00 | 24,500.00 | | 24,500.00 |
| 1,200,000.00 | 27,000.00 | | 27,000.00 |
| 1,300,000.00 | 29,500.00 | | 29,500.00 |
| 1,400,000.00 | 32,000.00 | | 32,000.00 |
| 1,500,000.00 | 34,500.00 | | 34,500.00 |
| 1,600,000.00 | 37,500.00 | | 37,500.00 |
| 1,700,000.00 | 40,500.00 | | 40,500.00 |
| 1,800,000.00 | 43,500.00 | | 43,500.00 |
| 1,900,000.00 | 46,500.00 | | 46,500.00 |
| 2,000,000.00 | 49,500.00 | | 49,500.00 |

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி/வங்கிச் சங்கம்
:........................
(புள்ளிக் கோட்டில் வங்கி/வங்கிச் சங்கத்தின் பெயரை எழுதுக)
முகவரி :-.......................................
திகதி :- 20........................

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி/
வங்கிச் சங்கத்தின் கையிருப்புக் காசுக் காப்பீட்டுஇலக்கம் :- .......................

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியின் உடல் உபாதை காப்பீட்டு
(சமுதாய அடிப்படை வங்கிக்கு மட்டும்) இலக்கம் :-.........................

பணிப்பாளர் குறுநிதி,
வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்,
4வது மாடி,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.

**<u>கையிருப்புக் காசு மற்றும் உடல் உபாதை காப்பீட்டு தவணைக் கட்டணம் அனுப்புதல்</u>**

20.............ம் ஆண்டுக்குரிய கையிருப்புக் காசு மற்றும் உடல் உபாதை காப்பீட்டுக்குரிய தவணைப்பணத்தை இத்துடன் அனுப்பி வைக்கின்றோம்.

| | |
|---|---|
| 1. காப்பீட்டு ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளும் தொகையின் எல்லை | ரூபா......................... |
| 2.காப்புறுதி பணத் தொகை | ரூபா......................... |
| 3. 5% நிவாரணத் தொகை | ரூபா......................... |
| 4. 5% நிவாரணத் தொகை கழிக்கப்பட்ட பின்னர் தவணைக் கட்டணம் | ரூபா......................... |
| 5.உடல் உபாதை காப்பீட்டுக்கான தவணைக் கட்டணம் | ரூபா......................... |
| 6. 10% தாமதக் கட்டணம் (தேவையாயின் மாத்திரம்) | ரூபா......................... |
| மொத்தம் (4+5)/(4+5+6) | ரூபா......................... |

காசோலை இலக்கம் :- .......................
காசோலை வழங்கிய இலங்கை வங்கிக் கிளை / மக்கள் வங்கிக் கிளை :- .......................

விண்ணப்பித்துள்ள காப்பீட்டு ஒப்பந்த தொகையின் எல்லையினை தாண்டிய பணத் தொகை புழக்க சுற்றோட்டத்தில் பயன்படுத்தாது இருக்க நடவடிக்கை எடுக்கப்படும்

| | |
|---|---|
| வங்கி எழுதுநர் | முகாமையாளர் |
| பெயர்:........................ | பெயர்:........................ |
| ஒப்பம்:........................ | ஒப்பம்:........................ |
| திகதி:........................ | திகதி:........................... |
| | (பதவி முத்திரை) |

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியின் பெயர் :................................

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் பெயர் :................................

பிரதேச செயலாளர் பிரிவு :................................

பணிப்பாளர் குறுநிதி,
வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்,
4வது மாடி,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.

**<u>கையிருப்புக் காசுக்கான காப்பீட்டு நிதியிலிருந்து இழப்பீடு கோருவதற்கான விண்ணப்பப்படிவம்</u>**

1 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி அல்லது வங்கிச் சங்கத்தின் பெயர் :..............................

2 கையிருப்புக் காசு காப்பீட்டு இலக்கம் :..............................

3 இறுதியாக காப்பீட்டு பாதுகாப்பு பெற்ற பண எல்லை :..............................

4 இறுதியாக காப்பீட்டு பாதுகாப்பு பெற்ற ஆண்டு :..............................

5 இழப்பீடு கோருவதற்குரிய சம்பவமும் அது நிகழ்ந்த திகதியும் :..............................

6 ஏற்பட்டுள்ள நஸ்டம் : ரூபா.....................

7 அதில் மீள அறவீடு செய்த தொகை : ரூபா.....................

8. இழப்பீடாக கோரும் தொகை : ரூபா.....................

(எழுத்தில் ரூபா.........................................................................................................)

9. இழப்பீடு கோருவதற்குறிய சம்பவம் தொடர்பாக சுருக்கமாக விளக்குக.

(பொலிஸ் அறிக்கையின் பிரதி இணைக்கவும்)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானது எனவும் உண்மையானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இச் சம்பவம் இடம் பெற்றது வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியின் / வங்கிச் சங்கத்தின் பணிக்குழுவின் கவனயீனத்தின் காரணத்திலாகும் /கவனயீனம் காரணமில்லை.

திகதி:-.......

பெயரும் ஒப்பமும்
முகாமையாளர் வா.எ.ச.அ.வங்கி /
முகாமையாளர் வா.எ.ச.அ.வங்கிச் சங்கம்

**நிறைவேற்றுச் சபை/ கட்டுப்பாட்டுச் சபையின் சிபாரிசு**

மேலே கூறப்பட்ட தகவல்கள் சரியானதும் உண்மையானதும் ஆகும். ஏன உறுதிப்படுத்துகின்றோம். ரூபா……………..(எழுத்தில் ரூபா…………………………………………..) இழப்பீடாக வங்கியினால் சிபாரிசு செய்கின்றோம் / செய்யவில்லை. பணிக் குழுவினரின் கவனயீனம் இச் சம்பவத்திற்கு காரணமல்ல/கவனயீனத்தினால் இச்சம்பவம் இடம் பெற்றள்ளது.

| | |
|---|---|
| பெயர் மற்றும் ஒப்பம் | பெயர் மற்றும் ஒப்பம் |
| கட்டுப்பாட்டுச் சபை / நிறைவேற்றுச் சபை | கட்டுப்பாட்டுசபை/ நிறைவேற்றுசபை |
| செயலாளர். | தலைவர்:- |
| திகதி:-……………… | திகதி:-……………… |

**வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படைவங்கிச் சங்க முகாமையாளரின் சிபாரிசு**

உரிய காலத்திற்கான காப்புறுதிப் பாதுகாப்பு பெறப்பட்டுள்ளது. பணிக்குழுவினரின் கவனயீனம் தவிர்ந்த / கவனயீனம் காரணத்தால் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இழப்பீடு வழங்குவது பொருத்தமானதாகும் என சிபாரிசு செய்கிறேன்/ செய்யவில்லை.

பெயர் மற்றும் ஒப்பம்

முகாமையாளர்வா.எ.ச.அ.வங்கிச் சங்கம்

திகதி:- (பதவி முத்திரை)

(வா.எ. ச. அ.வங்கிச் சங்கம் இழப்பீடு கோருவதாயின் தேவையற்றது)

**பிரதேச செயலாளரின் சிபாரிசு:-**

இழப்பீடு கோருவதற்கான காரணத்துடன் தொடர்புபட்ட விடயத்தினை ஆராய்ந்து பார்த்ததுடன் கோரப்பட்டுள்ள இழப்பீட்டுத்தொகையானரூபா………………(எழுத்தில் ரூபா……………………………………………………..) செலுத்துவதற்கு தகுதியுடையது என சிபாரிசு செய்கிறேன்.

பெயர் மற்றும் ஓப்பம்

பிரதேச செயலாளர்

(பதவி முத்திரை)

(பொருத்தமற்றதை வெட்டி விடவும்)

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியின் பெயர் :…………………………
வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் பெயர் :…………………………
பிரதேச செயலாளர் பிரிவு :…………………………

பணிப்பாளர் குறுநிதி,
வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்,
4வது மாடி,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.

**<u>பணத்திருட்டு கொள்ளைகளின் போது வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படைவங்கியின் பணிக்குழுவினருக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கான இழப்பீட்டினை கோருவதற்கான விண்ணப்பப்படிவம்.</u>**

1. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி அல்லது வங்கிச் சங்கத்தின் பெயர் :…………………………
2. உடல் உபாதை காப்புறுதி இலக்கம் :……………………....
3. இறுதியாக காப்பீட்டு பாதுகாப்பு பெற்ற ஆண்டு :…………………………
4. இழப்பீடு கோருவதற்குரிய சம்பவமும் அது நிகழ்ந்த திகதியும் :…………………………
5. இழப்பின் தன்மை :…………………………
6. பாதிப்புக்குள்ளான உத்தியோகத்தர் தொடர்பான தகவல்கள்

| <u>பெயர்</u> | <u>பதவிபாதிப்பின்/ இழப்பின் தன்மை</u> |
|---|---|
| 1. | |
| 2. | |

7. மரணமடைந்த உத்தியோகத்தரின் பொருட்டு இழப்பீடு கோருவதாயின் சட்ட ரீதியான விண்ணப்பதாரியின் பெயர்மற்றும் உறவு முறை
8. இழப்பீடு கோரும் தொகை ரூபா:-……………………………
9. இழப்பீடு கொருவதற்குரிய சம்பவம் தொடர்பாக சுருக்கமாக விளக்குக.

(பொலீஸ் மற்றும் மருத்துவ அறிக்கைகளின் பிரதி இணைக்கவும்)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானது எனவும் உண்மையானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இச் சம்பவம் இடம் பெற்றது வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியின் / வங்கிச் சங்கத்தின் பணிக்குழுவின் கவனயீனத்தின் காரணத்திலாகும் /கவனயீனம் காரணமில்லை.

3

திகதி:-…….

பெயரும் ஒப்பமும்
முகாமையாளர்வா.எ.ச.அ.வங்கி /
முகாமையாளர்வா.எ.ச.அ.வங்கிச் சங்கம்

**நிறைவேற்றுச் சபை/ கட்டுப்பாட்டுச் சபையின் சிபாரிசு**

மேலே கூறப்பட்ட தகவல்கள் சரியானதும் உண்மையானதும் ஆகும். என உறுதிப்படுத்துகின்றோம்.ரூபா……………. (எழுத்தில் ரூபா………………………..……..) இழப்பீடாக வங்கியினால் சிபாரிசு செய்கின்றோம்/ செய்யவில்லை. பணிக் குழுவினரின் கவனயீனம் இச் சம்பவத்திற்கு காரணமல்ல / கவனயீனத்தினால் இச்சம்பவம் இடம் பெற்றள்ளது.

| | |
|---|---|
| பெயர் மற்றும் ஒப்பம் | பெயர் மற்றும் ஒப்பம் |
| கட்டுப்பாட்டுச் சபை / நிறைவேற்றுச் சபை | கட்டுப்பாட்டுசபை/நிறைவேற்றுசபை |
| செயலாளர். | தலைவர் |
| திகதி:- | திகதி:- |

**வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படைவங்கிச் சங்க முகாமையாளரின் சிபாரிசு**

உரிய காலத்திற்கான காப்புறுதிப் பாதுகாப்பு பெறப்பட்டுள்ளது. பணிக்குழுவினரின் கவனயீனம் தவிர்ந்த / கவனயீனம் காரணத்தால் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இழப்பீடு வழங்குவது பொருத்தமானதாகும் என சிபாரிசு செய்கிறேன்/ செய்யவில்லை.

பெயர் மற்றும் ஒப்பம்
முகாமையாளர் வா.எ.ச.அ.வங்கிச் சங்கம்
(பதவி முத்திரை)

(வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படைவங்கிச் சங்கம் இழப்பீடு கோருவதாயின் தேவையற்றது)

**பிரதேச செயலாளரின் சிபாரிசு**

இழப்பீடு கோருவதற்கான காரணத்துடன் தொடர்புபட்ட விடயத்தினை ஆராய்ந்து பார்த்ததுடன் கோரப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையினை ரூபா…………..……(எழுத்தில்ரூபா…………………………………..………………) செலுத்துவதற்கு தகுதியுடையது என சிபாரிசு செய்கிறேன்.

பெயர் மற்றும் ஓப்பம்
பிரதேச செயலாளர்

(பதவி முத்திரை)

(பொருத்தமற்றதை வெட்டி விடவும்)